

ஓம்

ஸ்ரீகுருப்யோ நம:



ஆதிஶங்கரர் அருளிய

# காஶீ பஞ்சகம்

விளக்கியருளியவர் : பூஜ்யஶ்ரீ ஓங்காராநந்த மஹாஸ்வாமிகள்



விச்வாவசு தை (ஜனவரி 2026) வெளியீடு

# காஶீ பஞ்சகம்

பூஜ்யஸ்ரீ ஸ்வாமிகளின்
திருவடிகளுக்கு சமர்ப்பணம்

இந்த மின்புத்தகத்தை இலவசமாக
தரவிறக்கம் செய்துகொள்ளலாம்

UV Foundation, Chennai

ஓம்
ஶ்ரீகுருப்யோ நம:

காசி யாத்திரை என்பது நம்முடைய வாழ்க்கையில் ஒரு முக்கியமான தீர்த்த யாத்திரை. இந்தத் தீர்த்த யாத்திரை, சாஸ்த்ரத்தில் ஒரு ப்ராயச்சித்த கர்மா. ப்ராயச்சித்த கர்மா என்பது, நாம் அறிந்தோ, அறியாமலோ செய்திருக்கக்கூடிய பாவங்களுக்கு எல்லாம் கழுவாய்.

நான் யார், நான் எதற்காகப் பிறந்திருக்கிறேன், நான் எதை அடைய வேண்டும், அதற்கு என்ன வழி போன்ற விஷயங்களை சாஸ்த்ரங்கள் நமக்கு உபதேசிக்கின்றன. இதற்கு சாஸ்த்ரத்தில் ஸாத்ய ஸாதந விவேகம் என்று பெயர். தினந்தோறும் காலையில் எழுந்தவுடன் நாம் யார் என்பதை ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று சாஸ்த்ரம் சொல்கிறது.

**ப்ராஹ்மே முஹூர்த்தே உத்தாய சிந்தயேத்**
**ஆத்மநோ ஹிதம் ।**
**ஶ்ரீகுரும் விஷ்ணும் நமஸ்க்ருத்ய மாதரம்**
**பிதரம் ததா ॥**

அதிகாலையில் எழுந்து நம்முடைய ஆத்மாவிற்கு எது நல்லதோ அதனை நினைக்க வேண்டும், தாய், தந்தை, குரு, இறைவனை வணங்க வேண்டும் என்று தர்ம சாஸ்த்ரம் கூறுகிறது.

**ப்ராதஸ்மராமி ஹ்ருதி ஸம்ஸ்புரதாத்மதத்வம் ।**

என்று காலையில் எழுந்தவுடன் ஆத்ம தத்துவத்தை எண்ணுகிறோம்.

தமிழிலும், ஆசாரக்கோவை என்னும் நூலில்,

**வைகறை யாமம் துயில் எழுந்து, தான் செய்யும்
நல்அறமும் ஒண்பொருளும் சிந்தித்து, வாய்வதின்
தந்தையும் தாயும் தொழுது எழுக! என்பதே
முந்தையோர் கண்ட முறை**

என்று சொல்லப்பட்டுள்ளது.

பிறந்த குழந்தையைப் பார்த்து, **நீ தூய உணர்வு** என்று நம்முடைய சாஸ்த்ரம் சொல்கிறது. நம்முடைய சாஸ்த்ரத்தில் குழந்தையை முதன்முறையாக பூமியில் வைப்பது, தொப்புள் கொடி அறுப்பது, பால் கொடுப்பது என எல்லாவற்றுக்கும் மந்த்ரங்கள் இருக்கின்றன.

இந்த உடலில் வாழ்கின்ற உயிருக்கு, பிறப்பு, இறப்பு என்பது கிடையாது. ஆனால் இந்த சரீரத்திற்குக் கண்டிப்பாக மரணம் உண்டு. வந்த சரீரம் போய்த்தான் ஆக வேண்டும்.

ஜீவனுக்கு இந்த மநுஷ்ய சரீரம் கிடைத்திருக்கிறது. எதற்காக அந்த ஜீவன் மநுஷ்ய சரீரத்தை அடைந்துள்ளான் என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

மனித உடலில் பிறந்தவன், நான் இந்த உடம்பு என்ற தேஹாத்மபுத்தியுடன் இருந்தால் பின்னர், சாஸ்த்ரத்திற்கு அவசியமே இல்லாமல் போய்விடும்.

உடம்பிற்குள் இருக்கும் உயிருக்கு, ஜீவ: என்று பெயர். நான் உயிராக இருக்கிறேன் என்பதுதான், ஹிந்து தர்மத்தின் ஆரம்பப் பாடம்.

ஜீவனுக்கு அந்தஹ்கரணம் (உள்ளம்), கர்மேந்த்ரியங்கள், ஞாநேந்த்ரியங்கள் முதலானவை இருக்கின்றன. இவை எல்லாம் வெளிப்படுவதற்கு மநுஷ்ய சரீரம் இருக்கிறது.

இந்த மநுஷ்ய சரீரத்தில் நாம் செய்ய வேண்டியது - ஈச்வரன் என்று ஒருவர் நம்மை பார்த்துக் கொண்டிருக்கிறார் என்பதை உணர்ந்து அவரைப் பற்றிக் கொள்வதே ஆகும்.

அவர் கர்மபலதாதா - நாம் மனதால், வாக்கால், உடலால் செய்கின்ற அனைத்துச் செயல்களையும் பார்த்துக்கொண்டிருக்கிறார், அவற்றுக்கான பலன்களைக் கொடுக்கிறார்.

அவரை யாராலும் ஏமாற்ற முடியாது. நம் மனதில் ஓடும் வ்ருத்திகளை, எண்ணங்களை அவர் பார்த்துக் கொண்டிருக்கிறார் - ஸர்வ வ்ருத்தி ஸாக்ஷி அவர்.

இந்த உலகத்தில் நாம் பிறந்திருப்பது ஈச்வர பக்தி பண்ணுவதற்காகவும், புண்ணியத்தைச் செய்வதற்காகவும்தான் என்பது நம் விச்வாஸம்.

ஈச்வர பக்தியுடன் தர்மத்தைச் செய்வது என்பதுதான் இந்த உலகத்தில் நாம் செய்ய வேண்டிய முக்கியமான கார்யம். பணம் சம்பாதிப்பது என்பது இந்த சரீரம் எடுத்ததன் முக்கியமான நோக்கம் அல்ல.

தர்மத்தை எவ்வாறு அநுஷ்டிக்க வேண்டும் என்பதை எடுத்துரைக்க நிறைய தர்ம சாஸ்த்ரங்கள் இருக்கின்றன. ஸாமாந்ய தர்மம், விசேஷ தர்மம், புருஷ தர்மம், ஸ்த்ரீ தர்மம், ப்ரஜா தர்மம், ராஜ தர்மம்

என நிறைய இருக்கின்றன. இராமாயணம் மஹாபாரதம் முழுவதிலும் தர்மத்தைப் பற்றியே சொல்லப்பட்டிருக்கின்றன.

தர்மத்தை அனுஷ்டிப்பதற்காகத்தான் நமக்கு சரீரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த உடம்பைப் பாதுகாப்பதற்கு அர்த்தமும் (பொருளும்), அதற்கு சில சௌகர்யங்களைச் செய்து கொடுப்பதற்கு காமமும் (இன்பமும்) அவசியமாகின்றன.

## வாழ்க்கையின் குறிக்கோள் என்ன?

வாழ்க்கையின் குறிக்கோள் பணம் ஸம்பாதிப்பதா, குடும்பத்தை நிர்வாஹம் செய்வதா, நிறைய புண்யத்தை ஸம்பாதிப்பதா அல்லது எப்பொழுதும் நிம்மதியாக இருக்கும்பொருட்டு ஞானத்தை அடைவதா என்பதைச் சிந்திக்க வேண்டும்.

காலையிலிருந்து இரவு வரை நாம் நிறைய முயற்சி செய்கிறோம்; முயற்சி செய்யும் ஆற்றல் நம்மிடம் இருக்கிறது. ஆனால் எதன்பொருட்டு நாம் முயற்சி செய்ய வேண்டும்? என்பதைப் பற்றிய தெளிவு நமக்கு வேண்டும்.

## புருஷார்த்தம் என்றால் என்ன?

தர்ம, அர்த்த, காம, மோக்ஷம் என்ற நான்கு புருஷார்த்தங்களை பெரியோர்கள் நமக்குச் சொல்லி இருக்கிறார்கள். புருஷார்த்தம் என்ற சொல்லிற்கு இரண்டு அர்த்தங்கள் இருக்கின்றன. வாழ்க்கையின் குறிக்கோளுக்கும் புருஷார்த்தம் என்று பெயர், அந்த

குறிக்கோளின் பொருட்டு நாம் எடுக்கின்ற முயற்சிக்கும் புருஷார்த்தம் என்றே பெயர்.

**த்யாயதோ விஷயாந்பும்ஸ:**
**ஸங்கஸ்தேஷூபஜாயதே ।**
**ஸங்காத் ஸஞ்ஜாயதே காம:**
**காமாத்க்ரோதோऽபிஜாயதே ॥**

*- (ஶ்ரீமத்பகவத்கீதை : 2 - 62)*

எப்பொழுதும் உலகியல் விஷயங்களையே எண்ணிக்கொண்டிருப்பவனுடைய மனம் கெட்டுப் போகிறது. ஆசையினால் கோபம் வருகிறது, எரிச்சல் வருகிறது, புத்தியே கெட்டுப் போகிறது என்கிறார் பகவான் ஶ்ரீக்ருஷ்ணர்.

கடவுள் கொடுத்திருக்கிற இந்த சரீரம் மிகவும் அரிதானது.

**அரிதரிது மானிடர் ஆதல் அரிது**
**மானிடர் ஆயினும் கூன்குருடு செவிடு**
**பேடு நீங்கிப் பிறத்தல் அரிது**
**பேடு நீங்கிப் பிறந்த காலையும்**
**ஞானமும் கல்வியும் நயத்தல் அரிது**
**ஞானமும் கல்வியும் நயந்த காலையும்**
**தானமும் தவமும் தான்செயல் அரிது**
**தானமும் தவமும் தான்செய்வ ராயின்**
**வானவர் நாடு வழிதிறந் திடுமே**

*- (ஔவையார்)*

இந்த பாட்டுக்கு அர்த்தம் புரிந்ததெனில், ஒருவன் வாழ்க்கையில் ஸந்தோஷமாக இருப்பான்.

வாழ்க்கையில் எவ்வளவு கஷ்டம் வந்தாலும் அதனைக் கையாளும் சக்தி அவனுக்கு வரும்.

எவ்வாறு உடலுக்கு ப்ரச்சினைகள் வராது இருக்கவும், நோய் வந்தால் அதனை எதிர்கொள்ளும் பொருட்டும் உடற்பயிற்சிகள் செய்கிறோமோ, அதுபோன்று மனதிற்கு ப்ரச்சினைகள், துன்பங்கள் வராது இருக்கும்பொருட்டும், துன்பம் வந்தால் அதனைத் தாங்கும் சக்தியைப் பெறும்பொருட்டும் நிறைய அப்யாஸம் செய்ய வேண்டும்.

ஞானம் என்றால் சுயமாகச் சிந்திக்கின்ற சக்தி. கல்வி என்றால் படிப்பு, குருவிடம் சென்று முறையாகப் பெறும் சாஸ்த்ர அறிவு.

சிலருக்கு நன்கு சிந்திக்கின்ற சக்தி இருக்கும்; ஆனால் நல்ல குருவிடம் சாஸ்த்ரம் படிக்கும் வாய்ப்பு கிட்டாது.

சிலருக்கு நல்ல குரு, சாஸ்த்ர படிப்பு கிடைக்கும்; ஆனால் சுயமாகச் சிந்திக்கின்ற புத்தி இருக்காது. அதையே ஞானமும் கல்வியும் நயத்தல் அரிது என்கிறார்.

**ஞானமும் கல்வியும் நயந்த காலையும், தானமும் தவமும் தான் செய்தல் அரிது.** இல்லற வாழ்க்கையையும் துறவற வாழ்க்கையையும் கடைப்பிடிப்பது அதைக் காட்டிலும் அரிது.

தானம் என்றால் க்ருஹஸ்தாஶ்ரமம்; தவம் என்றால் ஸந்ந்யாஸ ஆச்ரமம். **தானமும் தவமும் தான் செய்தக்கால் வானவர் நாடு வழி திறந்திடுமே.** வானவர்

நாடு என்றால் ஆனந்தமான வாழ்க்கை என்று அர்த்தம்.

நம்முடைய முன்னோர்கள் உயிருக்கு உறுதி தேட வேண்டும் என்று சொல்லி இருக்கிறார்கள். உயிருக்கு உறுதி தேடுவதன் பொருட்டே உடலுக்கு உறுதி தேடுகிறோம்.

ஞானமும் வைராக்யமும் சித்திக்கும் பொருட்டே உணவு வேண்டும், உயிர் வாழ வேண்டும். **ஜ்ஞாநவைராக்ய - ஸித்த்யர்த்தம் பிக்ஷாம் தேஹி** । என்று அம்பாளை ப்ரார்த்திக்கிறோம்.

நம்முடைய முன்னோர்கள் நமக்குச் செய்த முக்கியமான உபதேசங்களில் ஒன்று காசி யாத்திரை. முந்தைய காலத்தில் காசிக்கு நடந்தே செல்வார்கள்.

இன்றும் கூட நிறைய பேர் குழுக்களாக நடந்து செல்கிறார்கள். ப்ராஹ்மணர்களின் விவாஹத்தில் காசி யாத்திரை என்பது ஒரு சடங்கு.

கல்யாண மாப்பிள்ளை, ப்ரஹ்மசர்ய ஆச்ரமத்தை விட்டு, க்ருஹஸ்தாச்ரமத்திற்குள் நுழையும் முன்னர், அவன் எந்த ஆச்ரமத்திலும் இல்லாத ஒரு நிலை இருக்கிறது. அந்த நிலையில் காசி யாத்திரை என்பதை வைத்திருக்கிறார்கள்.

மாப்பிள்ளை கையில் குடை, புத்தகம் எடுத்துக் கொண்டு, செருப்பணிந்து காசி யாத்திரைக்குக் கிளம்புவார். அப்பொழுது, பெண்ணின் தந்தையானவர், மாப்பிள்ளையைத் தடுத்து, தன் பெண்ணை தானம் செய்வதாகவும், அவளோடு

சேர்ந்து க்ருஹஸ்தாச்ரமத்தில் இன்பமாக வாழந்து, தர்மத்தை அநுஷ்டாநம் செய்து, தர்மமான குழந்தைகளைப் பெற்று அவர்களுக்கு தர்மத்தையும் ஞானத்தையும் உபதேசம் செய்ய வேண்டும் என்றும் வேண்டிக் கொள்வார்.

ஆச்ரமம் என்றால் தர்மமான வாழ்க்கை என்று பெயர். விருப்பு - வெறுப்பு இல்லாத சீரிய, முறையான வாழ்க்கைக்குத்தான் தர்ம வாழ்க்கை என்று பெயர்.

காசி யாத்திரை செய்வது என்பதில் நிறைய ஸம்ப்ரதாயங்கள் இருக்கின்றன. யாரேனும் ஒருவர் இறந்துவிட்டால், அந்த ஜீவனுக்கு க்ஷேமம் உண்டாகட்டும் என, இறந்தவரின் அஸ்தியை காசியில் (ப்ரயாகையில்) கரைக்கும் பழக்கமும் நம்மிடத்தில் இருக்கிறது.

காசிக்குப் போவதற்கு முன்னர், முதலில் இராமேச்வரத்திற்குப் போக வேண்டும். போவதற்கு முன்னர் வீட்டில் ஸங்கல்பம் செய்ய வேண்டும்.

காசி யாத்திரைக்குக் கிளம்பும் முன்னர், ஒருவர் வீட்டில் ப்ராஹ்மணர்களையெல்லாம் வரவழைத்து, எத்தனையோ பிறவிகளில் செய்த பாவங்களையெல்லாம் சொல்லி, **தீர்த்தயாத்ராம் கரோமி।** என ஸங்கல்பம் செய்துகொள்ள வேண்டும்.

தனது உள்ளத்தைத் தூய்மைப் படுத்திக்கொள்ளும் நோக்கத்துடன், பாபங்கள் நீங்கும்பொருட்டு யாத்ரா ஸங்கல்பம் செய்து, யாத்ரா தாநம் செய்ய வேண்டும்.

இராமாயணத்திலும் ஸ்ரீ இராமசந்த்ரமூர்த்தி, வநவாஸம் செல்வதற்கு முன்னால் தன்னுடைய ஆபரணங்களையெல்லாம் தானம் செய்கிறார்.

காசி யாத்திரை செல்லும் முன்னர், நாமும் தானங்கள் செய்து, யாத்திரை நல்லபடியாக முடிய வேண்டும் என்று ப்ரார்த்தனை செய்து, இராமேச்வரத்திற்கு முதலில் செல்ல வேண்டும். இராமேச்வரத்தில் இருக்கும் பல தீர்த்தங்களில் ஸ்நானம் செய்ய வேண்டும்.

**மந்த்ரே தீர்த்தே த்விஜே தேவே தைவஜ்ஞே**
**பேஷஜே குரௌ ।**
**யாத்ருஶீ பாவநா யஸ்ய ஸித்திர் பவதி தாத்ருஶீ ।।**

நாம் ஜபிக்கின்ற மந்த்ரம், ஸ்நானம் செய்யும் தீர்த்தம், வேதம் சொல்லும் ப்ராஹ்மணன், கடவுள், ஜோஸ்யர், வைத்யர், மந்த்ரம் சொல்லிக் கொடுக்கும் குரு, ஞானத்தை வழங்கும் குரு இவர்களின் மீது நமக்கு எவ்வளவு தூரத்திற்கு ச்ரத்தை இருக்கிறதோ, அவ்வளவு தூரத்திற்குப் பலன் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

இராமேச்வரத்தில் இராமநாத ஸ்வாமியின் தரிசனத்தைக் காட்டிலும் முக்கியமானது தீர்த்த ஸ்நானம்.

அங்கு கடற்கரை மணலில் சிவலிங்கத்தைச் செய்து அதற்குப் பூஜை செய்து, அக்னி தீர்த்தத்தில் ஆரம்பித்து எல்லா தீர்த்தங்களிலும் ஸ்நானம் செய்து, பின்னர் கோவிலுக்குள் சென்று ஸ்வாமியை தரிசனம் செய்துவிட்டு, பூஜை, த்யானம், ஜபங்கள் செய்து,

அங்கு இருக்கின்ற கோடி தீர்த்தத்தை எடுத்துக்கொண்டு, காசிக்கு செல்ல வேண்டும்.

காசி க்ஷேத்ரத்தில் இருக்கின்ற விச்வநாத ஸ்வாமிக்கு இந்த கோடி தீர்த்தத்தைக் கொண்டு அபிஷேகம் செய்து, அங்கு கங்கைக்கரையில் இருக்கிற மண்ணில் சிவலிங்கம் நிர்மாணம் செய்து, பூஜை செய்து, அங்கு உள்ள கங்கா ஜலத்தை எடுத்துக் கொண்டு வந்து விச்வநாத ஸ்வாமிக்கு அபிஷேகம் செய்து, பின்னர் காசியிலிருந்து கங்கா ஜலத்தை எடுத்துக்கொண்டு, அந்த ஜலத்தை இரண்டாகப் பிரித்து ஒன்றை வீட்டிற்கும், மற்றொன்றை இராமேச்வரத்திற்கும் எடுத்துக் கொள்ள வேண்டும்.

இராமேச்வரத்திற்குச் சென்று இராமநாத ஸ்வாமிக்கு அந்த கங்கா ஜலத்தைக் கொண்டு அபிஷேகம் செய்து, பின்னர் அந்த கங்கா ஜலத்தை வீட்டுற்குக் கொண்டு வந்து, அந்தக் கங்கைக்குப் பூஜை செய்து வீட்டில் பந்துக்கள் எல்லோரையும் அழைத்து, உணவிட்டு, அன்பாக உபசரித்து, இந்த காசி யாத்திரையை பூர்த்திசெய்வது வழக்கம். இது மிகவும் சுருக்கமாகச் சொன்ன விஷயம். இன்னும் நிறைய மந்த்ரங்கள், ச்லோகங்கள் இந்த காசி யாத்திரையில் இருக்கின்றன.

அதே போன்று, வடக்கில் இருக்கிற ஜனங்களும் காசிக்கு முதலில் சென்று, அங்கு சைகதலிங்கத்தை நிர்மாணம் செய்து, அதற்குப் பூஜை செய்து, விச்வநாதரை ஆராதனை செய்து, அங்கு இருக்கிற கங்கை தீர்த்தத்தை எடுத்து வந்து இராமேச்வரத்தில்

அபிஷேகம் செய்து, பின்னர் அங்கே இருக்கிற கோடி தீர்த்தத்தை எடுத்துக் கொண்டு போய் விச்வநாதருக்கு அபிஷேகம் செய்தால் அந்த பக்கத்தில் இருக்கிற மக்களின் காசி யாத்திரை பூர்த்தியாகிறது.

ஆக, நம்முடைய பாரத தேசத்தில் ஆன்மிகத்தின் வாயிலாக தேசிய ஒருமைப்பாடு என்பது இந்த காசி யாத்திரையில் மிக நன்றாக அமைந்திருக்கிறது.

பாரதத்தில் எத்தனையோ சின்னச் சின்ன தேசங்கள் இருந்தன என்று படிக்கிறோம். எத்தனை தேசங்கள் இருந்திருந்தாலும், இந்த சாஸ்த்ரம், இந்த வைதிக மதம் என்பது எல்லோருக்கும் இருந்திருக்கிறது.

பாரதம் முழுக்க வெவ்வேறு இராஜ்யங்கள் இருந்திருந்தாலும், நதிகள், வ்ருக்ஷங்கள், மலைகள் எல்லாம் பூஜைக்கு உரியனவாக, வழிபடுவதற்கு உரியனவாக இருந்திருக்கின்றன.

புறத்தில் நாம் செய்யும் காசி யாத்திரை மனதிற்குத் தூய்மையையும் அமைதியையும் கொடுக்கும். நம்மிடம் இருக்கின்ற காமம், க்ரோதம், லோபம், மோஹம், மதம், மாத்ஸர்யம் போன்ற கெட்ட குணங்கள் எல்லாம் போகும்.

வெறும் புத்தியினால் மட்டும் மனதைத் திருத்திவிட முடியாது. அதற்கு அத்ருஷ்ட சக்தியும் வேண்டி இருக்கிறது என்று சாஸ்த்ரம் சொல்கிறது. இந்த காசி யாத்திரையினால், நம்மிடம் இருக்கின்ற துர்குணங்கள் நீங்கும்.

அது மட்டுமல்ல மனதில் சாந்தி ஏற்படும். மனம் நன்றாக ஒருமுகப்படும். மனம் பரந்து விரியும். மனதில் ஸத்குணங்கள் பொங்கித் ததும்பும். இவை எல்லாம் புறத்தில் செய்கின்ற காசி யாத்திரையின் பலன்.

காசியைப் பற்றின இன்னொரு முக்கியமான விஷயம் என்னவென்றால், காசி என்பது ஒரு வித்யாஸ்தானம் (அறிவு நிலையம்).

**காசி நகர்ப்புலவர் பேசும்உரைதான்**
**காஞ்சியில் கேட்பதற்கோர் கருவிசெய்வோம்**

என்றும்,

**பாரத தேசமென்று பெயர்சொல்லுவார்-மிடிப்**
**பயம் கொல்லுவார்**

என்றும், பாடினார் மஹாகவி பாரதியார்.

பாரததேசம் என்கிற வார்த்தையைச் சொன்னாலே தரித்திரம் வராது என்கிறார். மிடிப்பயம் என்றால் வறுமையினால் வருகின்ற அச்சம்.

**ஞானம் என்பதோர் சொல்லின் பொருளாம் நல்ல பாரதநாடு** என்றும் பாடியுள்ளார் பாரதியார். அறிவு என்று சொன்னால் அது இந்த பாரத தேசம்தான் என்கிறார்.

இந்தப் பாரததேசம் அறிவு, ஒழுக்கம், அன்பு இவற்றில் உயர்ந்து திகழ்ந்தது. இந்த தேசத்தில் அனைவரும் புருஷார்த்த நிச்சயத்துடன் (வாழ்க்கையின் குறிக்கோளைப் பற்றிய தெளிவுடன்) வாழ்ந்திருக்கிறார்கள்.

**அயோத்யா மதுரா மாயா காஶீ காஞ்சீ அவந்திகா ।**
**புரீத்வாராவதீ சைவ சப்தைதே மோக்ஷதாயிகா: ।।**

இந்த தேசத்தில், ஏழு க்ஷேத்ரங்கள் விசேஷமாகச் சொல்லப்படுகின்றன.

ஸ்ரீ இராமஜந்மபூமி அயோத்யா, ஸ்ரீ க்ருஷ்ணஜந்மபூமி, மதுரா, மாயா (ஹரித்வார்), காசீ, காஞ்சீ, அவந்திகாபுரீ (உஜ்ஜயின்), த்வாரகா இவையெல்லாம் உத்தமமான வித்யா க்ஷேத்ரங்கள்.

இவை ஏழும் ப்ரஹ்மாண்டமான வித்யா ஸ்தானங்கள், கல்விச் சாலைகள். இதில் காஷ்மீர் சொல்லப்படவில்லையெனினும், காஷ்மீர் சாரதா (ஸரஸ்வதி)வின் ஸ்தானமாகும்.

காஞ்சி ஒரு பெரிய வித்யா ஸ்தானம். காஞ்சியில் இப்பொழுதும் புத்த மடம், ஜைன மடம், சைவ மடம், வைஷ்ணவ மடம் எல்லாம் இருக்கின்றன.

உபநிஷத் ப்ரஹ்மேந்திராள் மடம் என்று உபநிஷத்துக்கென்றே ஏற்படுத்தப்பட்ட ஒரு மடம் இருக்கிறது. அந்த மடத்திலிருந்து வந்தவர் தான் ஸதாசிவ பிரஹ்மேந்திராள்.

காஶீ எனும் சொல்லிற்கு ஞாநம் என்று அர்த்தம். காஶ் (काश् to shine) என்னும் மூலச்சொல்லிலிருந்து வந்ததுதான் காஶீ. வருணா, அஸி என்னும் இரண்டு நதிகள் அங்கு சேர்வதால், அதற்கு வாரணாஸி என்றும் பெயர்.

**காஶ்யாம் து மரணாந் முக்தி: ।**
**கமலாலயே து ஜநநாந் முக்தி: ।**

**அருணாச்சல-ஸ்மராந் முக்தி: ।**

என்று சொல்வதுண்டு.

திருவாரூரில் பிறக்க முக்தி, காசியில் இறக்க முக்தி, திருவண்ணாமலையை நினைத்தாலே முக்தி.

காஶீ, காஞ்சீ போன்ற ஏழு ஸ்தலங்கள் மோக்ஷத்தைக் கொடுக்கின்ற இடங்கள் என்று சொன்னோம். அங்கு சென்றாலே மோக்ஷம் கிட்டும் என்பதல்ல.

அவை வித்யா ஸ்தானங்கள், மோக்ஷத்திற்குக் காரணமான ஞானத்தைக் கொடுக்கின்ற இடங்கள்.

காசியில் இறக்க முக்தி என்றால், தன்னை பற்றிய உண்மை அறிவுடன் யார் சாகிறானோ, அவனுக்கு மோக்ஷம் என்று அர்த்தம்.

ஆதிசங்கரர், காஶீ பஞ்சகத்தில் ஆந்தரமான (அகவழியே) காசி யாத்திரையைச் சொல்கிறார்.

காசியில்தான் அவர் ப்ரஹ்மஸூத்ரத்திற்கு பாஷ்யம் எழுதினார், பண்டிதர்களை வாதத்தில் வென்றார்.

காசி, பண்டிதர்களின் மாபெரும் கோட்டை. இன்றைக்கும் ஏறத்தாழ 500 வித்யாஸ்தானங்கள் காசியில் இருக்கின்றன.

மிக அபூர்வமான, ப்ரமிக்க வைக்கும் விஷயங்கள் காசியில் இருக்கின்றன. மஹாபாரதத்தின் ஒரு லட்சம் ச்லோகங்களையும்

மனப்பாடமாகச் சொல்கின்றவர்கள் காசியிலே இன்றைக்கும் இருக்கிறார்கள்.

நிறைய வேத பண்டிதர்கள், சாஸ்த்ர பண்டிதர்கள், தமிழ்நாட்டிலிருந்து அங்கு சென்று பெரிய பெரிய பதவியை அடைந்திருக்கிறார்கள்.

மஹாமஹோபாத்யாய ஸ்ரீஅநந்தக்ருஷ்ண சாஸ்த்ரிகள், ஸ்ரீஸுப்ரஹ்மண்ய சாஸ்த்ரிகள் போன்ற பெரிய பண்டிதர்கள் தமிழ்நாட்டிலிருந்து காசிக்குச் சென்று, அங்கு வாழ்ந்திருக்கிறார்கள்.

நாம் இனி அகத்தில் மேற்கொள்ளப்படும் காசி யாத்திரையைப் பற்றித் தெரிந்துகொள்வோம். பஞ்சகம் என்றால் ஐந்து ச்லோகங்கள். காஶீ பஞ்சகம் என்றால் ஞாந பஞ்சகம்.

காஶீ என்ற சொல்லுக்கு இரண்டு அர்த்தங்கள் உள்ளன.

**1. சுத்த சைதன்யம்**

(தூய உணர்வு - pure consciousness)

**2. சுத்த சைதன்யத்தைப் பற்றின ஞானம்.**

நான் என்ற சொல், தூய உணர்வை மட்டுமே குறிக்கும் என்பது அத்வைத ஸித்தாந்தத்தின் பரம தாத்பர்யம்.

கடவுளை, ஜீவ - ஈஶ்வர பேத த்ருஷ்டி, ப்ரஹ்ம த்ருஷ்டி என இரண்டு கோணங்களில் சிந்திக்கலாம். ப்ரஹ்ம த்ருஷ்டியில் ஜீவ ஈச்வர பேதம் என்பது கிடையாது.

ஜீவ - ஈஶ்வர த்ருஷ்டியில் ப்ரஹ்மம் மறைந்திருக்கிறது. ப்ரஹ்மம் என்பது நிர்குணம், நிர்விசேஷம், சுத்த சைதன்யம்.

வேதபூர்வ, கர்ம காண்ட த்ருஷ்டியில், நம்மை ஜீவனாகப் புரிந்துகொள்கிறோம். பின்னர் வேதாந்தத்தின் அடிப்படையில், **அஹம் ப்ரஹ்மாஸ்மி ।** (நான் பரம்பொருளாக இருக்கிறேன்) என்று புரிந்துகொள்கிறோம். ஆன்மிகத்தின் அடிப்படையே நம்மை ஜீவனாகப் புரிந்துகொள்வதுதான்.

இந்த ஜீவனுக்கு, மனம் இருக்கிறது, அதில் எண்ணங்கள் இருக்கின்றன. எவ்வாறு ஒரு கரும்பலகையில் எழுத்துகள் எழுதப்பட்டு இருக்கின்றனவோ, அதுபோன்று அந்தக்கரணத்தில் (உள்ளத்தில்) வ்ருத்திகள் (எண்ணங்கள்) இருக்கின்றன.

உள்ளத்தில் பொருளைப் பற்றிய எண்ணமோ, புலனின்பங்களைப் பற்றிய எண்ணமோ இருந்தால், அமைதி ஏற்பட முடியாது.

தர்மத்திற்கு, முழுமையாக இல்லையெனினும், ஓரளவிற்கு சாந்தியைக் கொடுக்கும் சக்தி இருக்கிறது. தர்மாநுஷ்டானத்தினால்தான் நமக்கு ஸாதந சதுஷ்டய ஸம்பத்தி கிடைக்கிறது.

ஸாதந சதுஷ்டய ஸம்பத்தியுடன் கூடியவன், வேதாந்தத்தை ச்ரவணம் செய்து, ப்ரஹ்ம லக்ஷணங்களை ஓரிடத்தில் அமர்ந்துகொண்டோ, அல்லது ஸஹஜ ஸமாதியில் இருந்துகொண்டோ ஆழ்ந்து எண்ணுகிறான்.

**எத்தவத்தைச் செய்தாலும் ஏதவத்தைப் பட்டாலும், முத்தர் மனமிருக்கும் மோனத்தே**

என்பதற்கிணங்க, தர்மத்துடனும், ஈச்வர பக்தியுடனும் உலகியல் காரியங்களில் அவன் ஈடுபட்டிருந்தாலும், தனியே மௌனத்தில் இருந்தாலும், அவன் ப்ரஹ்ம லக்ஷணங்களை த்யானித்தவாறு இருக்கிறான்.

உண்மையில், நான் தூய உணர்வாக இருக்கிறேன். என்னில் எண்ணற்ற தன்னுணர்வுகள், உயிரற்ற, உயிருள்ள பொருட்கள் மாயையினால் கற்பிக்கப்பட்டிருக்கின்றன என்பதை ஒரு ஜீவனாக இருந்துகொண்டு நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

சாந்தமான மனதில், ப்ரஹ்மத்தின் லக்ஷணங்களை த்யானம் செய்வதுதான் இங்கு கங்கா ஸ்நானம்.

காசி என்ற ஒரு க்ஷேத்ரத்திற்கே பெரிய மகிமை இருக்கிறது. கங்கை நதி ப்ரவாஹமாக ஓடிக் கொண்டிருக்கிறது, விஶ்வநாதஸ்வாமி இருக்கிறார், அன்னபூரணி அம்பாள் இருக்கிறாள், விசாலாக்ஷி இருக்கிறாள், டுண்டி கணபதி இருக்கிறார், காலபைரவர் இருக்கிறார் என எத்தனையோ விசேஷங்கள் காசியில் இருக்கின்றன.

காசியில் அறுபத்துநான்கு ஸ்நான கட்டங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு ஸ்நான கட்டத்திற்கும் நிறைய புராண கதைகள் இருக்கின்றன, ஒவ்வொரு கட்டத்தைப் பற்றியும் படிப்பதற்கு காசி கண்டம் என்ற ஒரு புராண புத்தகமும் இருக்கிறது.

காசியில் கங்கா நதி உத்தரவாஹினியாக ஓடிக்கொண்டிருக்கிறாள். வடக்கு நோக்கிப் போகின்ற நதிக்கு மஹிமை அதிகம் என சாஸ்த்ரங்களிலே சொல்லப்பட்டிருக்கிறது.

வேதங்களில் கங்கை நதி, யமுனை நதியின் கரையில் வசித்த ரிஷிகளைப் போற்றி சொல்லப்பட்டிருக்கிறது.

தைத்திரீய ஆரண்யகத்தில், இரண்டாம் பிரச்னத்தில், கடைசி அநுவாகத்தில், ‘‘கிழக்கு திசையில் இருக்கின்ற தேவதைகளுக்கு நமஸ்காரம், தெற்கு திசையில் இருக்கின்ற தேவதைகளுக்கு நமஸ்காரம், மேற்கு திசையில் இருக்கின்ற தேவதைகளுக்கு நமஸ்காரம், வடக்கு திசையில் இருக்கும் தேவதைகளுக்கு நமஸ்காரம்.

மேல்திசையில் இருக்கின்ற தேவதைகளுக்கு நமஸ்காரம், கீழ்திசையில் இருக்கின்ற தேவதைகளுக்கு நமஸ்காரம். இரண்டிற்கும் நடுவில் இருக்கின்ற தேவதைகளுக்கு நமஸ்காரம்.

கங்கைக்கும் யமுனைக்கும் மத்தியிலே, ஹரித்வார் - ரிஷிகேசத்தில் வசிக்கக்கூடிய ரிஷிகளெல்லாம் ப்ரஸந்நாத்மாவாக (மலர்ந்த உள்ளத்துடன்) இருந்துகொண்டு எங்களுடைய வாழ்க்கையை நீண்டகாலம் தர்மத்தின்பொருட்டு வளரும்படி செய்கிறார்கள்’’ என்று கூறப்பட்டுள்ளது.

**கங்காயமுநயோர் மத்யே யே வஸந்தி தே மே**
**ப்ரஸந்நாத்மாந: சிரஞ்ஜீவிதம் வர்தயந்தி ।**

கங்கைக்கும் யமுனைக்கும் நடுவிலே இருக்கிற அந்த முனிவர்களுக்கு நமஸ்காரம் நமஸ்காரம் நமஸ்காரம் என்று ப்ரார்த்தனை இருக்கிறது. காசி க்ஷேத்ரத்தில் உள்ள கங்கையில் இறங்கி ஸ்நானம் செய்ய வேண்டுமெனில், அதற்குப் படித்துறை வேண்டும்.

பட்டினத்தார் சொன்னார் – **ஆற்றில் கிடந்தும் துறையின்றி அலைகின்றனையே** என்று. ஓடும் தண்ணீரிலிருந்து ஒரு கரை கிடைத்தால்தான் வெளியில் வர முடியும்.

சரியான கரை இன்றி, முட்செடிகள் எல்லாம் இருந்தால் கரை ஏற முடியாது. அந்தப் படித்துறைக்கு பெயரிட்டு, அதற்கு சாஸ்த்ரப்படி நிறைய பூஜைகளும் செய்ய வேண்டும்.

ஒரு குளம் வெட்ட வேண்டும் என்றால் அதற்கு தடாக ப்ரதிஷ்டா பூஜா என்று இருக்கிறது. ஒரு கிணறு வெட்ட வேண்டும் என்றால்கூட கூப ப்ரதிஷ்டா பூஜா என்று இருக்கிறது. அது போன்று, வந ப்ரதிஷ்டா, துலஸீ ப்ரதிஷ்டா, பில்வ ப்ரதிஷ்டா என்று எத்தனையோ பூஜைகள் இருக்கின்றன.

நதியின் துறைக்குக் கட்டம் என்று பெயர். காலம் காலமாக ப்ரவாஹமாக ஓடிக் கொண்டிருக்கும் கங்கையில் ஸ்நானம் செய்ய வேண்டுமெனில், சங்கிலியைப் பிடித்துக் கொண்டு கட்டத்தில் இறங்கி ஸ்நானம் செய்ய வேண்டும்.

கங்கா நதியினுடைய ப்ரவாஹத்தில் ஸ்நானம் செய்து நம் பாவங்களையெல்லாம் போக்க

வேண்டும், புண்ணியத்தை ஸம்பாதிக்க வேண்டும், மனம் சாந்தி அடைய வேண்டும் என எண்ணுகிறோம்.


காசியில் நிறைய கட்டங்கள் இருக்கின்றன. அதில் ஒரு கட்டத்திற்கு மணிகர்ணிகா கட்டம் என்று பெயர். இங்குதான் ஆதிசங்கரர் ப்ரஹ்மஸூத்ரத்திற்கு பாஷ்யம் எழுதினார். நிறைய பேர் அந்த கட்டங்களுக்குப் படகிலேயே சென்று, படகிலேயே உட்கார்ந்துகொண்டு கர்மாக்களைச் செய்துவிட்டு வந்து விடுகிறார்கள்.

ஒரு வருட காலம் காசியிலேயே இருந்து ஒவ்வொரு கட்டத்திற்கும் போய் தனித்தனியாக ஸ்நானம் செய்து கர்மா செய்கின்றவர்களும் இருக்கிறார்கள்.

ஆதிசங்கரர் - காசி என்பது எது, கங்கை என்பது எது, மணிகர்ணிகா கட்டம் என்பது எது என்று மூன்று விஷயங்களைச் சொல்கிறார். அதாவது மனதில் இருக்கிற அமைதிதான் மணிகர்ணிகா கட்டம். மெய்ப்பொருளைப் பற்றிய அறிவுதான் கங்கா ப்ரவாஹம். தூய உணர்வே காசி க்ஷேத்ரம்.

**ஸா காஶிகா அஹம்** - அந்தத் தூய உணர்வே நான்; இந்த உடம்பு, மனம், புத்தி நான் அல்ல என்னும் அர்த்தத்தில் சொல்கிறார். காஶீ பஞ்சகத்தின் முதல் ச்லோகத்தைப் பார்ப்போம்.

# முதல் ஶ்லோகம்



मनोनिवृत्तिः परमोपशान्तिः
सा तीर्थवर्या मणिकर्णिका च ।
ज्ञानप्रवाहा विमलादिगङ्गा
सा काशिकाऽहं निजबोधरूपा ।। १ ।।

மநோநிவ்ருத்தி: பரமோபஶாந்தி:
ஸா தீர்த்தவர்யா மணிகர்ணிகா ச ।
ஜ்ஞாநப்ரவாஹா விமலாதிகங்கா
ஸா காஶிகாऽஹம் நிஜபோதரூபா ।। 1 ।।

## பதவுரை

**மநோநிவ்ருத்தி:** - மனமானது தன்னை முற்றிலும் வ்யவஹாரத்திலிருந்து பிரித்துக்கொள்வது என்பது; **பரமோபஶாந்தி:।** - மேலான பேரமைதியைக் கொடுக்கிறது. **ஸா** - அது; **தீர்த்தவர்யா** - தீர்த்தங்களில் தலைசிறந்த; **மணிகர்ணிகா ச** - மணிகர்ணிகா என்னும் படித்துறையே ஆகும்; **ஜ்ஞாநப்ரவாஹா** - உள்ளத்தில் ஓடிக் கொண்டிருக்கும் ப்ரஹ்மனின் லக்ஷணங்களின் (பரம்பொருளின் இலக்கணங்களைப் பற்றிய) எண்ண ஓட்டமே; **விமலாதிகங்கா** - மாசுகள் முதலியன அற்ற, தூய கங்கையாகும்; **ஸா** -அந்த; **நிஜபோதரூபா** - தூய உணர்வு ஸ்வரூபமாகிய; **காஶிகா** - காஶீ க்ஷேத்ரம்; **அஹம் (அஸ்மி) ।** - நானாக இருக்கிறேன்.

## பொழிப்புரை

மனமானது தன்னை முற்றிலும் வ்யவஹாரத்திலிருந்து பிரித்துக்கொள்வது என்பது மேலான பேரமைதியைக் கொடுக்கிறது. அது தீர்த்தங்களில் தலைசிறந்த மணிகர்ணிகா என்னும் படித்துறையே ஆகும். உள்ளத்தில் ஓடிக் கொண்டிருக்கும் ப்ரஹ்மனின் லக்ஷணங்களின் எண்ண ஓட்டமே மாசுகள் முதலியன அற்ற, தூய கங்கையாகும். அந்த தூய உணர்வு ஸ்வரூபமாகிய காஶீ க்ஷேத்ரம் நானாகவே இருக்கிறேன்.

## விளக்கவுரை

**மநோ நிவ்ருத்தி:** – மனம், எப்பொழுதும் உள்ளுக்குள்ளே இருந்துகொண்டு கண், காது, மூக்கு, நாக்கு ஆகியவை வழியாக வெளி விஷயங்களிலேயே போய்க்கொண்டிருக்கிறது.

மனதிற்கு அதிகமான அளவில், நிறுத்தாமல் விஷயங்களைக் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். நல்லதையே பார்த்தாலும் அதிலும் ஓர் அளவு வேண்டும்.

**பரமோபஶாந்தி:** – ஆன்மிகமாக, ஆத்யாத்மிகமாக உழைப்பவனுக்கு மனதில் மேலான அமைதி கிடைக்கிறது. புற விஷயங்களில் செல்லும் மனதை உள்ளுக்குள் இழுப்பது மேலான அமைதியைக் கொடுக்கிறது.

மனம் நிவ்ருத்தியாகி இருக்கிறது என்றால், மனதிலுள்ள எண்ணங்கள் புறத்தை நோக்கி ஓடவில்லை என்று பொருள்.

வேதாந்தம் கற்பதற்கு ஶம: (மனவடக்கம்) என்பது ஒரு முக்கியமான ஸாதனையாகக் கூறப்பட்டுள்ளது.

மனம் தூய்மையாக இருந்தால்தான் அமைதியாக இருக்க முடியும். மனதில் காமக்ரோதாதிகள் இருந்தால், அமைதி என்பதை நினைத்துக்கூட பார்க்க முடியாது.

பேராசை, கோபம், எரிச்சல், நம் பொருளைப் பாதுகாக்க வேண்டும் என்ற பயம், சாஸ்த்ரத்தைக்

கற்காமல் இருப்பது இவைகளால் மனசாந்தி ஏற்பட வாய்ப்பில்லை.

சாஸ்த்ரம் கற்பது என்பது மனத்தூய்மையைத் தரும். பணிவாக இருப்பது அமைதியை தரும். திருக்குறளைப் போன்ற நல்ல சாஸ்த்ரங்களைப் படிப்பதன் மூலம் மனஅமைதி கிடைக்கும்.

நம்மிடம் இருக்கின்ற பொருளைக் கொடுத்து, நம்மால் முடிந்த அளவிற்கு சிலருக்கு மனதார உபகாரம் செய்தோமெனில், அது மனதிற்கு சாந்தியைக் கொடுக்கும்.

**தேயம் தீந ஜநாய ச வித்தம் ।**

நம்மிடமுள்ள பொருளை, வறியவர்களுக்கு வழங்க வேண்டும் என்று ஆதிசங்கரர் பஜ கோவிந்தத்தில் கூறுகிறார்.

பொறுமையாக இருப்பது மனதிற்கு சாந்தியை கொடுக்கும். ஆசையை அளவாக வைத்துக்கொண்டால் சாந்தியாக இருக்கலாம். இதுதான் உண்மையாக காசியில் வாழும் வாழ்க்கை.

அதற்கு நாம் காசியில்தான் இருக்க வேண்டும் என்பதில்லை. நாம் இருக்கிற இடத்தில் இருந்துகொண்டே இதனை அடைய முடியும்.

மனதைப் புறநோக்கிலிருந்து மீட்டு, இவ்வாறு அமைதிப்படுத்துதலே மணிகர்ணிகா படித்துறையாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

**மநோவ்ருத்தி நிவ்ருத்தி த்வாரா பரம உப ஶாந்தி: ।**

எது நம்மை தூய்மைப்படுத்துகிறதோ, அதற்குத் தீர்த்தம் என்று பெயர். தீர்த்தம் என்று சொன்னால் புனிதப்படுத்துவது என்று அர்த்தம்.

இந்த மணிகர்ணிகா கட்டத்தில் இருக்கிற தீர்த்தம் நம்முடைய பாவத்தைப் போக்கித் தூய்மையைக் கொடுக்கக்கூடிய சக்தி படைத்தது என்று சொல்கிறோம்.

ஆனால் இங்கு, மனதில் இருக்கிற அமைதியே உண்மையான தீர்த்தம் என்கிறார் ஆதிசங்கரர். நாம் அதனை ஸம்பாதிக்க வேண்டும். புறத்திலுள்ள தீர்த்தம், அகத்திலுள்ள தீர்த்தத்திற்கு ஸாதனமாக இருக்க வேண்டும்.

தீர்த்தங்களில் தலைசிறந்தது மணிகர்ணிகா. மனதில் இருக்கிற மேலான அமைதியே மணிகர்ணிகா கட்டம்.

**ஞாநப்ரவாஹா விமலாதிகங்கா ।**

**மனதில் ஆத்மா நித்ய: । –** (நான் நிலையானவன்)

**ஆத்மா பூர்ண: । –** (நான் பூர்ணமானவன்)

**ஆத்மா ஸர்வகத: । –** (நான் எங்கும் நிறைந்தவன்)

**ஆத்மா ஏக: । –** (நான் ஒருவனே)

**ஆத்மா அத்வைத: ।** – (நான் இரண்டற்றவன்) என ப்ரஹ்மனுடைய லக்ஷணங்கள் ஓடிக்கொண்டே இருக்கின்றன.

**அகண்டாகாரவ்ருத்திப்ரவாஹ: ।**
**அத்வைதவ்ருத்திப்ரவாஹ: ।**

இரண்டற்ற மெய்ப்பொருளைப் பற்றிய பிளவுபடாத எண்ண ஓட்டமே கங்கையாகச் சொல்லப்பட்டுள்ளது.

மணிகர்ணிகா கட்டம் என்பது மேலான மன அமைதி. கங்கை நீரின் ஓட்டம் என்பது, வேதாந்தத்தைக் கற்று, இந்த ஜீவன் தன்னை ப்ரஹ்மமாக புரிந்து கொண்டிருத்தல்.

வேதத்தின் கர்மகாண்டத்தில் உடலுக்குள் வாழும் உயிர் நீ என்று கூறப்பட்டுள்ளது. ஞான காண்டத்தில் நீ உயிர் அல்ல, உணர்வு என்கிறது சாஸ்த்ரம். நீ உயிர் அல்ல உணர்வு என்பது அத்வைத ஸித்தாந்தம்.

நான் உயிர் என்கின்ற உண்மை புரியாமல் ஸாதந சதுஷ்டய ஸம்பத்தியை அடைய முடியாது. ஸாதந சதுஷ்டய ஸம்பத்தி இல்லாமல் நான் ப்ரஹ்மம் என்று தெரிந்துகொள்ள முடியாது. உயிர் தன்னை உணர்வு என்று உணர முடியாது.

முதலில் ஜீவபுத்தி வேண்டும்; அதன் பின்னர் சிவதாஸபுத்தி வேண்டும். கடைசியில், சிவோஹம் என்பதுதான் பாடம்.

இங்கு மாறுவது, ஆவது என்று ஒன்றும் இல்லை. இருப்பதனைச் சரியாக புரிந்துகொள்கிறோம், அவ்வளவே. லௌகிகமாக வாழும் நிறைய பேர், தன்னை உடலாக மட்டுமே நினைத்துக்

கொண்டிருக்கிறார்கள். யாருக்கு தேஹாத்மபுத்தி அழுத்தமாக இருக்கிறதோ, அவன் பொருளின்பத்தையே பாதுகாப்பாக நினைக்கிறான். ஜீவபுத்தி உள்ளவனோ, தான் செய்த தர்மம் தனக்குப் பாதுகாப்பைத் தருவதாக எண்ணுகிறான்.

வேதாந்தம் படித்து ப்ரஹ்மாத்மபுத்தி வந்துவிட்டது என்று சொன்னால் தனக்கு பாதுகாப்பு தேவையில்லை; ஏனெனில் இரண்டாவதாக ஒரு பொருளே இல்லை என்பதை உணர்கிறான்.

இங்கு ப்ரஹ்மஞாநவ்ருத்தி ப்ரவாஹம் (பரம்பொருளைப் பற்றிய எண்ண ஓட்டமே) விமலாதி கங்கா என்று சொல்கிறார்.

**விமலாதி கங்கா** - விமலாதி என்றால் அழுக்கு முதலியன இல்லாதது, மாசற்றது என்று அர்த்தம். அதாவது கெடுதல்கள் எதுவுமே இல்லாதது.

ஜலத்தை அசுத்தப்படுத்தலாம். ஆனால் இந்த ஞாந ப்ரவாஹத்தை மாசுபடுத்த முடியாது. இது **ஶுத்தம் அபாபவித்தம் ।** என்று ஈஶாவாஸ்யோபநிஷத் கூறுகிறது.

**நிஜபோதரூபா ஸா காஶிகா அஹம் அஸ்மி ।**

காசி க்ஷேத்ரம் என்பது தூய உணர்வு. அந்த காசி க்ஷேத்ரம் நானாக இருக்கிறேன்.

போத: என்ற சொல் ஸ்வரூப ஞானத்தைக் குறிக்கிறது, நிஜபோத: என்பது தூய உணர்வைக் குறிக்கும். அதுதான் காசி க்ஷேத்ரம். அது நானே.

**பாராதி பூதம் நீ அல்லை உன்னிப்பார்**
**இந்திரியம் கரணம் நீ அல்லை**
**ஆராய் உணர்வு நீ என்றான் ஐயன்**
**அன்பாய் உரைத்த சொல் ஆனந்தம் தோழி!**

- *(தாயுமானவர்)*

ஆக, நான் தூய உணர்வாக இருக்கிறேன்.

**சீவனென்ன சிவனென்ன வேறில்லை**
**சீவனார் சிவனாரை அறிகிலர்**
**சீவனார் சிவனாரை அறிந்தபின்**
**சீவனார் சிவனார் ஆயிட்டிருப்பரே**

- *(திருமூலர்)*

நீ ஜீவனாக இருக்கிறாய், சிவனுடைய தாசன் நீ, தர்மத்தை அனுஷ்டாநம் செய், சிவன் பெயரில் பக்தி கொள், நிறைய பரோபகாரம் செய், உனக்கு அதில் மனம் நன்றாக இருக்கும் என்று உபதேசம் செய்கிறாள் வேதமாதா.

உனக்கு நான் தனம், தான்யம், பசுக்கள், நிறைய புத்ரர்கள், நீண்ட ஆயுள் அனைத்தையும் கொடுப்பேன். ஆனால் இந்த தர்மங்களையெல்லாம் அனுஷ்டாநம் செய் என குழந்தைக்குச் சொல்வதுபோல் கற்றுத்தருகிறாள்.

**வேதமாதா ப்ரசோதயந்தீ பவநே த்விஜாதா ।**

- *(மஹாநாராயண உபநிஷத்)*

அம்மா அழகாகக் குழந்தையின் கைகளைப் பிடித்துக்கொண்டு போகிற மாதிரி, சாஸ்த்ரம் நமக்கு பாடம் சொல்லிக் கொடுக்கிறது. ஆக,

*மணிகர்ணிகா கட்டம் = மேலான அமைதி (படித்துறை)*

*விமலாதி கங்கா = பரம்பொருளைப் பற்றிய எண்ண ஓட்டம்*

*காசி க்ஷேத்ரம் = தூய உணர்வு*

காசி க்ஷேத்ரத்தில், மணிகர்ணிகா கட்டத்தில், கங்கா ஸ்நானம் செய்கிறேன் என்றால் தூய உணர்வாகிய என்னிடத்தில் இருக்கின்ற, ஆழ்ந்த அமைதி உடைய மனதில் தூய உணர்வாகிய மெய்ப்பொருளைப் பற்றிய எண்ணங்களை ஆழ்ந்து எண்ணிக்கொண்டு இருக்கின்றேன் என்று பொருள்.

இந்தப் பிறவியில், ஒருவர் ப்ரஹ்ம ஞானமாகிய கங்கையில் நீராடவில்லையெனில், அவர் புறத்தில் நீரில் செய்த கங்கா ஸ்நானம் நிறைவு பெறுவதில்லை, அதன் பலன் இந்தப் பிறவியில் அவருக்குக் கிட்டவில்லையென்று பொருள்.

புறத்தில் கங்கை நீரில் செய்கின்ற ஸ்நானத்தின் லக்ஷயம், அகத்தில், பரம்பொருளைப் பற்றிய எண்ணங்களை ஆழ்ந்து எண்ணுதலே ஆகும். எண்ணங்களுக்குப் பொருள் மெய்ப்பொருளாக இருக்க வேண்டும். அவ்வாறு இருத்தலே கங்கா ஸ்நானம்.

**ஓர்த்துஉள்ளம் உள்ளது உணரின் ஒருதலையாப்**
**பேர்த்துஉள்ள வேண்டா பிறப்பு.**


*(திருக்குறள் - 357)*

என்றார் திருவள்ளுவர்.

அதாவது, மனம் எப்பொழுதும் இருக்கின்ற மெய்ப்பொருளை நன்றாக ஆழ்ந்து சிந்திக்குமானால், உடல்பற்று, உலகப்பற்று, புறப்பற்று, அகப்பற்று, அகங்காரம், மமகாரம் முதலானவற்றிலிருந்தும் பிறவிச்சுழலிலிருந்தும் விடுபட்டுப் பேரின்பத்தில் நிலைத்திருக்கும்.



# இரண்டாவது ஶ்லோகம்



यस्यामिदं कल्पितमिन्द्रजालं
चराचरं भाति मनोविलासम् ।
सच्चित्सुखैका परमात्मरूपा
सा काशिकाऽहं निजबोधरूपा ॥ २ ॥

யஸ்யாமிதம் கல்பிதமிந்த்ரஜாலம்
சராசரம் பாதி மநோவிலாஸம் ।
ஸச்சித்ஸுகைகா பரமாத்மரூபா
ஸா காஶிகாऽஹம் நிஜபோதரூபா ॥ 2 ॥

**பதவுரை**

**யஸ்யாம் (நிஜபோதரூபாயாம்)** - எந்தத் தூய உணர்வில் (எந்த மெய்ப்பொருளில்); **இதம்** - இந்த; **சராசரம்** - அசைகின்ற அசையாத (நாம் அனுபவிக்கின்ற அனைத்தும்); **மநோவிலாஸம்** - மனதின் கற்பனையாக; **கல்பிதம்** - கற்பிக்கப்பட்டு; **இந்த்ரஜாலம்** - மாயாஜாலம் போன்று; **பாதி** - புலப்படுகிறதோ; **ஸத்-சித்-ஸுக-ஏகா** - தூய இருப்பு, தூய உணர்வு, தூய இன்பமான இரண்டற்ற; **பரமாத்மரூபா** - பரமாத்மாவின் யதார்த்த ஸ்வரூபமான; **ஸா** - அந்த; **காஶிகா** - காசி க்ஷேத்ரமாக; **நிஜபோதரூபா** - உண்மை ஸ்வரூபமான தூய உணர்வாக; **அஹம் (அஸ்மி)** - நான் இருக்கிறேன்.

**பொழிப்புரை:**

எந்தத் தூய உணர்வில் [எந்த மெய்ப்பொருளில்], இந்த அசைகின்ற அசையாத [நாம் அனுபவிக்கின்ற அனைத்தும்] மனதின் கற்பனையாகக் கற்பிக்கப்பட்டு, மாயாஜாலம் போன்று புலப்படுகிறதோ, தூய இருப்பு, தூய உணர்வு, தூய இன்பமான இரண்டற்ற பரமாத்மாவின் யதார்த்த ஸ்வரூபமான, அந்த காசி க்ஷேத்ரமாக உண்மை ஸ்வரூபமான தூய உணர்வாக, நான் இருக்கிறேன்.

## விளக்கவுரை

அனைத்து விகல்பங்களும் மனதின் மாயக்கற்பனை, மாயாஜாலம். மாயாவி வந்து வித்தைகள் காட்டி நம்மை ஆழ்ந்து அதில் ஈடுபட வைப்பார். நாம் அந்த வலைக்குள் விழுந்துவிடுகிறோம்.

இணையதளத்திற்குள் சென்றால், நம்முடைய நேரம் செல்வதே நமக்குத் தெரிவதில்லை. அதுவும் நம்மை உள்ளே இழுத்துக்கொண்டு செல்லும் ஒரு பெரிய மாயாஜாலம், இந்த்ரஜாலம்.

நாமே ஒரு வலையைச் செய்து அதற்குள் மாட்டிக்கொண்டு அவஸ்தைப்படுகிறோம். வீட்டை நாமே கட்டுகிறோம், குடும்பத்தை நாமே உருவாக்குகிறோம், அதன் பின்னர் நாம்தான் அது சரியில்லை, இது சரியில்லை என புலம்பித் தீர்க்கிறோம்.

ஆனால் பகவானோ அநாயாஸமாக ஸ்ருஷ்டி பண்ணுகிறார், ஸ்திதி பண்ணுகிறார், ஸம்ஹாரம் பண்ணுகிறார், பஞ்ச க்ருத்ய பராயணனாக இருக்கிறார்.

மனதினுடைய ப்ரபாவத்தினால், கற்பிக்கப்பட்ட இந்த்ரஜாலத்தைப்போல் இந்த சராசரம் தோன்றுகிறது.

அத்வைதத்தில் த்வைதம் மாயையால் தோன்றுகிறது. ஒற்றுமையில் வேற்றுமை மாயையால் தோன்றுகிறது. வேற்றுமையைக் காண்பதே மனதின் ஸ்வபாவமாக இருக்கின்றது.

**எப்பொருள் எத்தன்மைத்து ஆயினும் அப்பொருள்**
**மெய்ப்பொருள் காண்பது அறிவு.**

*(திருக்குறள் - 355)*

எந்தப் பொருள் எப்படி இருந்தால் என்ன, அதனை மெய்ப்பொருளாகப் பார்ப்பது தான் அறிவு. நான் யார் என்று யோசித்துப் பார்த்தால், முதலில் நான் ஒரு மனிதன் என்பதுதான் உண்மை, நான் ஒரு ப்ராஹ்மணன், நான் ஒரு க்ஷத்ரியன், நான் ஒரு தமிழன் என்பவையெல்லாம் கல்பிதம்.

இவை பழக்கவழக்கத்திற்காக வைத்திருப்பவை. இவையெல்லாம் மநோ விலாஸம் கல்பிதம் இந்த்ரஜாலம். ஆனால் நாம் உண்மையை மறந்துவிடுகிறோம்.

நம்முடைய சாஸ்த்ரம் இன்னும் ஒருபடி மேலே போகிறது. நாம் மனிதர்கள் இல்லை, மனித உடம்பில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற உயிர்கள் என்கிறது.

வேதாந்த சாஸ்த்ரம் இன்னும் மேலே சென்று, உயிர்கள் அனைத்தும் உண்மை அல்ல, உணர்வே உண்மை என்கிறது.

**ஸத் சித் ஸுகைகா பரமாத்மரூபா ஸா காஶிகா**
**நிஜபோதரூபா அஹம் அஸ்மி ।**

கங்கா ஸ்நானம் என்பது நான் தேஹம் அல்ல, ஜீவன் அல்ல, நான் ப்ரஹ்மஸ்வரூபம் என்ற எண்ணங்களை எண்ணிக்கொண்டே இருப்பதாகும்.

தன்னுணர்வு என்பது ஜீவாத்மா, இரவல் ஆத்மா. இது உறக்கத்தில் காணாமல் போகிறது, கனவில்,

வேறு ஓர் உலகைப் படைக்கிறது. விழிப்பு நிலையில் வேறுவிதமாகச் செயல்படுகிறது. இந்தத் தன்னுணர்விற்கு நாம் உண்மைத்துவம் கொடுக்க வேண்டிய அவசியமில்லை.

அறிவால் ஆராய்ந்து, உணர்ந்து தன்னுணர்வை நீக்க வேண்டும். இதுதான் அத்வைத ஸித்தாந்தத்தின் உபதேசம். உண்மையான தூய்மையான உணர்வில் இந்த மாயையான தன்னுணர்வுகள் இருக்கின்றன.

நான் இருக்கிறேன் என்பது எனக்குத் தெரியும். இந்த இருப்பு என்பது எல்லாவற்றிலும் இருக்கிறது. மாலை இருக்கிறது, மேஜை இருக்கிறது, கண்ணாடி இருக்கிறது, உடம்பு இருக்கிறது, கட்டிடம் இருக்கிறது, விளக்கு இருக்கிறது. இவற்றில், இருக்கிறது என்பது 'ஸத்'. அது நாமரூபத்துடன் சேர்ந்து இருக்கிறது. ஒரு தட்டு இருக்கிறது என்று வைத்துக் கொள்வோம். அது நமக்குப் பயன்படுகிறது. அதற்கென்று பெயரும் வடிவமும் இருக்கின்றன.

**அஸ்தி பாதி ப்ரியம் ரூபம் நாம இத்யம்ஶ-**
**பஞ்சகம் ।**
**ஆத்யத்ரயம் ப்ரஹ்மரூபம் ஜகத்ரூபம்**
**ததோத்வயம் ॥**

அஸ்தி என்றால் இருக்கிறது. பாதி என்றால் விளங்குகிறது, ப்ரியம் என்றால் ஸந்தோஷத்தைக் கொடுக்கிறது. நாமரூபம் என்றால் இதற்குப் பெயரும் வடிவமும் இருக்கின்றன. ஒவ்வொரு பொருளிலும் இவ்வாறு ஐந்து அம்சங்கள் இருக்கின்றன. முதலில்

கூறப்பட்ட மூன்று அம்சங்களான – இருக்கிறது, விளங்குகிறது, இன்பமாக இருக்கிறது என்பவை ப்ரஹ்மத்தினுடைய தன்மை. இந்த மூன்றும் எல்லாவற்றிலும் அடிப்படையாக இருக்கின்றன என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும் – தூய இருப்பு, தூய உணர்வு, தூய இன்பம்.

ஸத் சித் ஸுக ஏகா என்றால் தூய இருப்பு, தூய உணர்வு, தூய இன்பம். ஸத் சித் ஸுகம் என்பது எங்கும் இருக்கிறது. அது ஒன்றுதான், இரண்டற்றதாக இருக்கிறது. நான் இருக்கிறேன், நான் இருக்கிறேன் என்பதை உணர்கிறேன். இருக்கிறேன் உணர்கிறேன் என்பதைப் பிரிக்க முடியாது. இருப்பே உணர்வு, உணர்வே இருப்பு. (ஸத்தே சித் சித்தே ஸத்).

தூய உணர்வு, தூய இருப்பு, அத்வைதம் என்பதுதான் பரமாத்மாவினுடைய யதார்த்த ஸ்வரூபம். என்னுடைய யதார்த்த ஸ்வரூபமும் அதுவே ஆகும். நான் தூய உணர்வு என்பதை நிதித்யாஸனம் செய்வதுதான் இங்கே கங்கா ஸ்நானம். இதுதான் உண்மையில் கங்கா ஸ்நானம்.

**ஸா நிஜபோதரூபா காஸிகா அஹம் (அஸ்மி)।** – அந்தத் தூய உணர்வே நான். தன்னுணர்வு என்பது ஜீவாத்மா. அது நிஜபோத ரூபம் அல்ல.

காலத்தாலும் இடத்தாலும் பொருளாலும் வரையறுக்கப்படாத தூய உணர்வே நான் என்கிற வ்ருத்தியே (எண்ணமே) அற்புதமான கங்கா ஸ்நானம். நாம் எல்லோரும் உண்மையில் நடமாடும் காசி க்ஷேத்ரங்கள்.

எவ்வாறு புறத்தில் கங்கையில் ஸ்நானம் செய்யும்பொழுது, படித்துறையில் உள்ள சங்கிலியைக் கெட்டியாகப் பிடித்துக் கொள்கிறோமோ, அதே போன்று அகத்தில், இந்த கங்கா ஸ்நானம் செய்யும்பொழுதும், சாஸ்த்ரத்தையும் குருவையும் கெட்டியாகப் பிடித்துகொண்டு மூழ்கி மூழ்கி எழ வேண்டும்.

**குருதே கங்கா ஸாகரகமநம்**
**வ்ரதபரிபாலநம் அதவா தாநம் ।**
**ஜ்ஞாநவிஹீநஸ்ஸர்வமதேந**
**பஜதி ந முக்திம் ஜந்மஶதேந ॥**

- *(பஜ கோவிந்தம்)*

கோமுக்கிலிருந்து கங்கா ஜலத்தை எடுத்துக்கொண்டு கங்கைக் கரையோரமாக நடந்தே கொல்கத்தாவில் உள்ள கங்காஸாகர் வரையில் யாத்திரை செல்கிறார்கள்.

எத்தனையோ வ்ரதங்களை அனுஷ்டிக்கிறார்கள், தானங்களைச் செய்கிறார்கள். ஆனால் என்ன செய்தாலும் சரி, நான் பரம்பொருளாக இருக்கிறேன் என்கிற ஞானத்தை ஒருவன் அடைய வேண்டும்.

எத்தனை சாஸ்த்ரங்களைக் கற்றாலும், எத்தனை பூஜைகள் செய்தாலும், எத்தனை ஜன்மாக்கள் எடுத்தாலும் ப்ரஹ்மஞானமின்றி மோக்ஷம் என்பது ஸித்திக்காது.



# மூன்றாவது ஶ்லோகம்



कोशेषु पञ्चस्वधिराजमाना
बुद्धिर्भवानी प्रतिदेहगेहम् ।
साक्षी शिवः सर्वगतोऽन्तरात्मा
सा काशिकाऽहं निजबोधरूपा ॥ ३ ॥

**கோஶேஷு பஞ்சஸ்வதிராஜமாநா**
**புத்திர்பவாநீ ப்ரதிதேஹகேஹம் ।**
**ஸாக்ஷீ ஶிவ: ஸர்வகதோऽந்தராத்மா**
**ஸா காஶிகாऽஹம் நிஜபோதரூபா ॥ 3 ॥**

## பதவுரை

**பஞ்சஸு** – ஐந்து; **கோஶேஷு** – கோசங்களிலும்; **அதிராஜமாநா** – வ்யாபித்து, அதற்கு வேறாக ப்ரகாசிக்கும்; **ஸா** – அந்த; **நிஜபோதரூபா** – உண்மையான அறிவு ஸ்வரூபமான ஆத்மாவான (தூய உணர்வான); **காஶிகா** – காசி க்ஷேத்ரம்; **அஹம் (அஸ்மி)** – நானாக இருக்கிறேன். **ப்ரதிதேஹகேஹம்** – ஒவ்வொரு உடல், மனத்திலும் குடிகொண்டிருக்கும்; **புத்தி:** – புத்தி சக்தியாக (பகுத்தறியும் ஆற்றலாக); **பவாநீ (அஸ்தி)** – அம்பாள், பவாநீ இருக்கிறாள்; **ஸர்வகத:** – எங்கும் நிறைந்திருக்கும்; **அந்தராத்மா** – (அனைத்தினுள்ளும் உறைகின்ற) ஸமஷ்டி சைதன்யமாக; **ஸாக்ஷீ** – ஸாக்ஷியாக; **ஶிவ: (அஸ்தி)।** – விச்வநாதர் (சிவபெருமான்) இருக்கிறார்.

## பொழிப்புரை

ஐந்து கோசங்களிலும் வ்யாபித்து, அதற்கு வேறாக ப்ரகாசிக்கும், அந்த உண்மையான அறிவு ஸ்வரூபமான ஆத்மாவான [தூய உணர்வான] காசி க்ஷேத்ரம் நானாக இருக்கிறேன். ஒவ்வொரு உடல், மனத்திலும் குடிகொண்டிருக்கும் புத்தி சக்தியாக [பகுத்தறியும் ஆற்றலாக] அம்பாள் பவாநீ இருக்கிறாள். எங்கும் நிறைந்திருக்கும் [அனைத்தினுள்ளும் உறைகின்ற] ஸமஷ்டி சைதன்யமாக ஸாக்ஷியாக விச்வநாதர் [சிவபெருமான்] இருக்கிறார்.

## விளக்கவுரை

அந்நமயகோசம், ப்ராணமயகோசம், மநோமயகோசம், விஜ்ஞாநமயகோசம், ஆநந்தமயகோசம் ஆகிய ஐந்து கோசங்களைப் பற்றி, தைத்திரீய உபநிஷத் ப்ரஹ்மாநந்தவல்லியில் உபதேசிக்கப்பட்டுள்ளது.

ஆத்மா அல்லது ப்ரஹ்மன் இந்த ஐந்து கோசங்களுக்கும் வேறானது.

அந்நமயம் என்பது ஸ்தூல சரீரம். ப்ராணமயம் என்பது உடலுக்கு இருக்கும் ப்ராணசக்தி. மநோமயம் என்பது உணர்ச்சிகள் மயமானது.

விஜ்ஞாநமயம் என்பது அறிவு, படித்தவற்றையெல்லாம் ஒப்பிட்டு நோக்கிப் புரிந்துகொள்ளும் ஆற்றல் ஆகியவை. இந்த உலக ஸந்தோஷங்களில் மயங்கிப் போதல் ஆநந்த மயம்.

உண்மையாக, நாம் யார் என்பதை இந்த கோசங்கள் மறைப்பதால், இவை கோஶ: (உறை) எனப்படுகின்றன.

நான் கறுப்பாக இருக்கிறேன், சிவப்பாக இருக்கிறேன், குண்டாக இருக்கிறேன், ஒல்லியாக இருக்கிறேன் என எத்தனையோ உயர்வு தாழ்வு மனப்பான்மைகள் நமக்குள் இருக்கின்றன.

இந்த கோசங்கள் நம்மை இந்த உடலாக, மனதாக நினைக்க வைத்து நம்முடைய உண்மை ஸ்வரூபத்தை நினைக்கவிடாமல் செய்கின்றன.

நம்மைப் பற்றின உண்மையான ஞானத்தை நாம் பெறாத வரையில், நாம் நம்மை இந்த உடலாகவே உணர்வோம்.

அதிராஜமாநா என்றால், இந்த கோசங்களுக்கெல்லாம் ஆதாரமாக ஒளிர்ந்து கொண்டிருக்கின்ற தூய உணர்வு என்று பொருள்.

ஐந்து கோசங்களிலும் வ்யாபித்து, ஐந்து கோசங்களுக்கும் வேறாக தன்னை விளக்கிக் கொண்டிருக்கும் தத்துவமே நமது உண்மை ஸ்வரூபம் என்று உணர வேண்டும்.

நான் அந்நமயம் அல்ல, ப்ராணமயம் அல்ல, மநோமயம் அல்ல, விஜ்ஞாநமயம் அல்ல, ஆநந்தமயம் அல்ல. இந்த ஐந்து கோசங்களுக்கும் வேறாக ப்ரகாசிக்கும், தூய உணர்வே நான் என்பதை உணர வேண்டும்.

**புத்திர்பவாநீ ப்ரதிதேஹகேஹம் ।**
**ஸாக்ஷீ ஶிவ: ஸர்வகத: அந்தராத்மா ।**

நான் காசி க்ஷேத்ரம், என்னிடத்தில் புத்திரூபமாக விசாலாக்ஷி இருக்கிறாள், ஸாக்ஷிரூபமாக விச்வநாதர் இருக்கிறார்.

நான் தூய உணர்வு, அதில் புத்தி சக்தி, அதாவது விவேக சக்திதான் அம்பாள். அவள் பெயர் பவாநீ **(பவஸ்ய பத்நீ பவாநீ ।)**.

ஆநீ என்றால் மனைவி. பவாநீ என்பது அம்பாளுக்கு ஒரு திருநாமம். இங்கு விசாலாக்ஷி – விசாலமான பார்வை உடையவள் என்று அர்த்தம்.

எந்த மதத்தைச் சேர்ந்தவனாக இருந்தாலும் சரி, எந்த பாஷை பேசுபவனாக இருந்தாலும் சரி, ஸமஸ்த ஜீவராசிகளுக்கும் தாயானவள் அம்பாள்.

**ப்ரதிதேஹகேஹம் புத்தி: பவாநீ பவதி ।**

ப்ரதிதேஹகேஹே என்றால் ஒவ்வொரு கார்ய கரண ஸங்காதத்திலும், ஒவ்வொரு தேஹமாகிய வீட்டிலும், ஒவ்வொரு தன்னுணர்வு குடிகொண்டிருக்கும் சரீரத்திலும் என்று அர்த்தம். ஒவ்வொரு தேஹத்திலும் குடிகொண்டிருக்கும் புத்தி சக்தியை பவானியாகப் பார்க்க வேண்டும்.

நான் சுத்த சைதன்யம், உடல், மனம் என்னைச் சார்ந்து இருக்கின்றன. இதில் புத்தி சக்தியாக அம்பாள் இருக்கிறாள்.

வ்யாவஹாரிக த்ருஷ்டியில் (நடைமுறை கோணத்தில்), இதற்கு ஸாக்ஷியாக இருப்பது, ப்ரதிபிம்ப சைதன்யம், ஜீவன்.

உண்மையில் ப்ரஹ்மன் என்பது ஸாக்ஷித்வம் அற்றது. ஸாக்ஷித்வம் மித்யா, ஸாக்ஷீ அதிஷ்டாநம் ஸத்யம். ஸாக்ஷியாக இருக்கும் தன்மை பொய், ஸாக்ஷிக்கு ஆதாரமாக இருக்கும் தூய உணர்வே மெய்.

**ஸர்வகத: அந்தராத்மா ஸாக்ஷீ ஶிவ: ।**

ஸத், சித், ஆநந்தம் (தூய இருப்பு - உணர்வு - இன்பம்) தான் ப்ரஹ்மன். இந்தத் தூய உணர்வில் மாயாசக்தி கற்பிக்கப்பட்டிருக்கிறது.

ஸத்யமான ப்ரஹ்மனில் மித்யாரூபமான மாயா கற்பிக்கப்பட்டிருக்கிறது. மாயையில் சுத்த

ஸத்வத்தில் ப்ரதிபிம்பிக்கிற சைதன்யம் ஈச்வரன் எனப்படுகிறார்.

எல்லா இடத்திலும் இருக்கும் ஸமஷ்டி சைதன்யம்தான் ஈஶ்வரன். அந்த சைதன்யம்தான் இங்கு ஸாக்ஷீ ஶிவ: என்று சொல்லப்பட்டிருக்கிறது. என்னிடத்தில் தூய உணர்வின் அம்சமும் இருக்கிறது, ஸகுண ப்ரஹ்மனுடன் கூடிய ஈச்வர அம்சமும் இருக்கிறது, ஜீவன் என்ற தன்மையும் இருக்கிறது.

**தூய உணர்வே உயிர்களுக்கு உயிரான இறைவனாகவும் உயிர்களாகவும் உள்ளங்களாகவும் உடல்களாகவும் உலகங்களாகவும் உறவுகளாகவும் மாயையால் காட்சியளிக்கிறது. இதுதான் அத்வைத ஸித்தாந்தத்தின் ஸாரம்.**


**ஸர்வகத: அந்தராத்மா ஸாக்ஷீ ஶிவ: ।**

எங்கும் நிறைந்திருக்கும், ஸாக்ஷியாக இருக்கும் சைதன்யம்தான் விச்வநாதர். ஸர்வகத: என்றால் எங்கும் நீக்கமற நிறைந்துள்ள என்று அர்த்தம். எங்கும் என்பதே ப்ரஹ்மனில் கிடையாது.

இடம் என்பது ப்ரஹ்மனுக்குக் கிடையாது. இடமே இல்லாத போது எங்கும் என்ற சொல்லிற்குப் பொருள் இல்லை.

ப்ரஹ்மனில் தேசம், காலம், வஸ்து எதுவும் இல்லை. இந்த உடலில் இருக்கும் ஈஶ்வர அம்சமும் மித்யாவே என்று உணர வேண்டும்.

# நான்காவது ஶ்லாகம்



काश्यां हि काशते काशी
काशी सर्वप्रकाशिका ।
सा काशी विदिता येन
तेन प्राप्ता हि काशिका ॥ ४ ॥

காஶ்யாம் ஹி காஶதே காஶீ
காஶீ ஸர்வப்ரகாஶிகா ।
ஸா காஶீ விதிதா யேந
தேந ப்ராப்தா ஹி காஶிகா ॥ 4 ॥

### பதவுரை

**காஶ்யாம் ஹி** - உள்ளத்தில் அன்றோ; **காஶீ** - தூய உணர்வாகிய காசி; **காஶதே।** - ஒளிர்கிறது!; **காஶீ** - தூய உணர்வாகிய காசி; **ஸர்வப்ரகாஶிகா।** - அனைத்தையும் ஒளிர்விக்கிறது!; **யேந** - எவரால்; **ஸா** - அந்த; **காஶீ** - தூய உணர்வாகிய காசி; **விதிதா** - அறியப்படுகிறதோ; **தேந ஹி** - அவரால் அன்றோ; **காஶிகா** - மோக்ஷமானது; **ப்ராப்தா।** - அடையப்படுகிறது (உணரப்படுகிறது)!

### பொழிப்புரை

உள்ளத்தில் அன்றோ, தூய உணர்வாகிய காசி ஒளிர்கிறது! தூய உணர்வாகிய காசி அனைத்தையும் ஒளிர்விக்கிறது! எவரால் அந்தத் தூய உணர்வாகிய காசி அறியப்படுகிறதோ, அவரால் அன்றோ மோக்ஷம் அடையப்படுகிறது (உணரப்படுகிறது)!

### விளக்கவுரை

**காஶ்யாம் காஶதே காஶீ।**

காசியில் காசி ப்ரகாசிக்கிறது. காஶ்யாம் என்றால் அந்தஹ்கரணே, மனதில், உள்ளத்தில் என்று அர்த்தம்.

காஶீ என்றால் தூய உணர்வு. காஶதே என்றால் விளங்கிக் கொண்டிருக்கிறது, ஒளிர்ந்து

கொண்டிருக்கிறது. நம் உள்ளத்தில், தூய உணர்வு என்றென்றும் விளங்கிக் கொண்டிருக்கிறது.

**ஸதாஸர்வகதோப்யாத்மா ந ஸர்வத்ராவபாஸதே ।**
**புத்தாவேவாவபாஸேத ஸ்வச்சேஷு**
**ப்ரதிபிம்பவத் ॥**

*- (ஆத்மபோத:)*

ஆத்மா எங்கும் வ்யாபித்திருந்தாலும் அது எல்லா இடங்களிலும் புலப்படுவதில்லை. அது புத்தியில்தான் புலப்படுகிறது. நம் உள்ளத்தில் அந்த தூய உணர்வு அகண்ட ஜோதியாக, என்றென்றும் ப்ரகாசிக்கிறது.

ஒரு தீபத்தை எடுத்துக்கொண்டால், எங்கும் இருக்கும் அக்நி தத்துவமானது தீபத்தின் சுடரில் வெளிப்படுகிறது. ஐந்து முகம் கொண்ட விளக்கில், ஐந்து சுடர்கள் இருப்பினும், நெருப்பு ஒன்றே.

அவ்வாறே நாம் எல்லோரும் இந்த உடல் மனதிற்குள் இருக்கிறோம். விளக்குகள் பல இருந்தாலும், வெளிச்சம் ஒன்றே. உள்ளமாகிய காசியில் உணர்வாகிய காசி ஒளிர்கிறது.

**காஶீ ஸர்வப்ரகாஶிகா** - காசி எல்லாவற்றையும் ஒளிர்விக்கின்றது, எல்லா கோசங்களையும் அது ஒளிர்விக்கின்றது. ஸூர்யன், சந்த்ரன், நக்ஷத்ரங்கள் எல்லாவற்றையும் ஒளிர்விக்கின்ற காசியாக இருக்கிறது.

**தமேவ பாந்தமநுபாதி ஸர்வம் தஸ்ய பாஸா**
**ஸர்வமிதம் விபாதி ।**

*- (முண்டகோபநிஷத் : 2 - 2 - 11)*

கண்களைக்கொண்டு வெளியில் இருக்கும் விஷயங்களைத் தெரிந்துகொள்ளலாம். கண்ணைத் தெரிந்துகொள்வது மனமே. மனதால் கண் அறியப்படுகிறது.

மனம் என்னால் நேராக அறியப்படுகிறது. நான் எதனால் அறியப்படுகிறேன் என்றால் நான் அறிவாகவே இருக்கிறேன் என்பதுதான் பதில்.

மனம் இந்த்ரியங்களை ஒளிர்விக்கும். ஆனால் இந்த்ரியங்கள் மனதை ஒளிர்விக்காது. நான் மனதை ஒளிர்விக்கிறேன், ஆனால் மனம் என்னை ஒளிர்விக்காது.

விஷயங்களை இந்த்ரியங்கள் ஒளிர்விக்கின்றன. விஷயங்கள் இந்த்ரியங்களை ஒளிர்விக்காது. ஆகையினால் நேரடியாகவோ, எதன் மூலமாகவோ இந்த தூய உணர்வே எல்லாவற்றையும் ப்ரகாசப்படுத்துகிறது.

**அஸாரே கலு ஸம்ஸாரே ஸாரமேதத் சதுஷ்டயம் ।**
**காஶீவாஸ: ஸதாம்ஸங்க: கங்காம்ப: ஶிவபூஜநம் ॥**


ஸாரமில்லாத இந்த உலக வாழ்க்கையில் ஸாரமானது இந்த நான்கு விஷயங்கள் தான் – காசியில் வசிப்பது, எப்பொழுதும் ஸத்ஸங்கத்தில் இருப்பது, கங்கா ஜலத்தைப் பருகுவது (அதில் ஸ்நானம் செய்வது), சிவனுக்குப் பூஜை செய்வது என்று காசியில் யாரோ ஒரு பண்டிதர் சொல்லி இருக்கிறார்.

நாம் போக வேண்டிய காசி யாத்திரை, ஸ்தூலமாக இருக்கும் ஜட காசி அல்ல. குருவின்


சாஸ்த்ரத்தின் அநுக்ரஹத்துடன் எவன் இந்த அழியாத, மாறாத, நிர்விசேஷ காசியை, தூய உணர்வைத் தெரிந்துகொள்கிறானோ அவனுக்கு அந்த காசியானது அடையப்பட்டது அன்றோ! என்கிறார்.

எவன் இந்த சைதன்யமான காசியை அறிகிறானோ, அந்தக் காசியாகவே அவன் தன்னை உணர்கிறான்.

உடல்பற்று, உலகப்பற்று, அகப்பற்று, புறப்பற்று, அகங்காரம், மமகாரத்தையெல்லாம் அவன் துறக்கிறான்.



# ஐந்தாவது ஶ்லோகம்



काशीक्षेत्रं शरीरं त्रिभुवनजननी व्यापिनी ज्ञानगङ्गा
भक्तिः श्रद्धा गयेयं निजगुरुचरणध्यानयोगः प्रयागः ।
विश्वेशोऽयं तुरीयं सकलजनमनः साक्षिभूतोऽन्तरात्मा
देहे सर्वं मदीये यदि वसति पुनस्तीर्थमन्यत् किमस्ति ।। ५ ।।

**காஶீக்ஷேத்ரம் ஶரீரம் த்ரிபுவநஜநநீ வ்யாபிநீ ஜ்ஞாநகங்கா**
**பக்தி: ஶ்ரத்தா கயேயம் நிஜகுருசரணத்யாநயோக: ப்ரயாக: ।**
**விஶ்வேஶோऽயம் துரீயம் ஸகலஜநமந:**
**ஸாக்ஷிபூதோऽந்தராத்மா**
**தேஹே ஸர்வம் மதீயே யதி வஸதி**
**புநஸ்தீர்த்தமந்யத் கிமஸ்தி ।। 5 ।।**

## பதவுரை

**ஶரீரம்** - உடலே, **காஶீக்ஷேத்ரம்** - காசிக்ஷேத்ரமாகும்; **த்ரிபுவநஜநநீ** - மூன்று உலகங்களுக்கும் தாயான; **வ்யாபிநீ** - எங்கும் நிறைந்துள்ளவள்; **ஜ்ஞாநகங்கா** - ஞானரூபமானகங்கை (உள்ளத்தில் உள்ள நல்லெண்ணங்கள் ஞானமாகிய கங்கையாகும்); **பக்தி:** - குரு, ஈச்வரன், சாஸ்த்ரம் ஆகியோரிடத்தில் செலுத்தப்படும் பக்தியும்; **ஶ்ரத்தா** - ச்ரத்தையுமான; **இயம்** - இவை; **கயா** - கயா க்ஷேத்ரமாகும்; **நிஜகுருசரணத்யாநயோக:** - தனக்கு மோக்ஷ சாஸ்த்ரத்தை உபதேசம் செய்த குருவின் திருவடிகளை த்யானிப்பதே; **ப்ரயாக:** - ப்ரயாக க்ஷேத்ரம்; **ஸகலஜநமந:** - அனைத்து மக்களின் மனங்களிலும்; **ஸாக்ஷிபூத:** - ஸாக்ஷியாக; **அந்தராத்மா** - உள்ளிருக்கக்கூடிய; **அயம்** - இந்த; **விஶ்வேஶ:** - விச்வேச்வரர்; **துரீயம் (சைதன்யம் பவதி)** - துரீய (சைதன்யமாக இருக்கிறார்); **யதி** - ஒருவேளை (இவ்விதம்); **மதீயே** - என்னுடைய; **தேஹே** - உடலில்; **ஸர்வம்** - அனைத்தும்; **வஸதி** - குடிகொண்டிருக்கும்பொழுது; **(தர்ஹி)** - (பின்னர்); **புந:** - மேலும்; **அந்யத்** - (நான் தேடிச் செல்லவேண்டிய) வேறு; **தீர்த்தம்** - தீர்த்தமானது; **கிம்** - என்ன; **அஸ்தி** - உள்ளது ?

## பொழிப்புரை

உடலே காசிக்ஷேத்ரமாகும். மூன்று உலகங்களுக்கும் தாயான, எங்கும்

நிறைந்துள்ளவள் ஞானரூபமான கங்கை (உள்ளத்தில் உள்ள நல்லெண்ணங்கள் ஞானமாகிய கங்கையாகும்). குரு, ஈச்வரன், சாஸ்த்ரம் ஆகியோரிடத்தில் செலுத்தப்படும் பக்தியும் ச்ரத்தையுமான இவை கயா க்ஷேத்ரமாகும். தனக்கு மோக்ஷ சாஸ்த்ரத்தை உபதேசம் செய்த குருவின் திருவடிகளை த்யானிப்பதே ப்ரயாக க்ஷேத்ரம். அனைத்து மக்களின் மனங்களிலும் ஸாக்ஷியாக உள்ளிருக்கக்கூடிய இந்த விச்வேச்வரர், துரீய (சைதன்யமாக இருக்கிறார்). ஒரு வேளை (இவ்விதம்) என்னுடைய உடலில் அனைத்தும் குடிகொண்டிருக்கும்பொழுது, (பின்னர்) மேலும் (நான் தேடிச் செல்லவேண்டிய) வேறு தீர்த்தமானது என்ன உள்ளது?

**விளக்கவுரை**

காசிக்கு இன்னொரு பெயர் மஹாஸ்மசானம். காசியில் விச்வநாதர் சிதாபஸ்மத்தைப் பூசிக்கொண்டு தாண்டவமாடுகிறார்.

காசியில் பிணங்களை எரியூட்டுவது என்பது நடந்த வண்ணம் இருக்கும். எந்நேரமாக இருந்தாலும், பிணங்களைக் கொண்டு சென்ற வண்ணம் தெருக்கள் காட்சியளிக்கும். அந்த க்ஷேத்ரத்தில் இருந்தாலே, வைராக்யம் மிக நன்றாகக் கூடும்.

பெரும்பணக்காரராக இருந்தாலும் சரி, மஹாபண்டிதராக இருந்தாலும் சரி, அவ்வளவே வாழ்க்கை. நம் உடலுக்குள் எப்பொழுதும் ஜாடராக்நி, சிந்தாக்நி என அக்நி எரிந்து கொண்டேதான் இருக்கிறது.

**சிதாசிந்தா த்வயோர்மத்யே சிந்தா ஏவ கரீயஸீ ।**
**சிதா தஹதி நிர்ஜீவம் சிந்தா ப்ராணயுதம் வபு: ॥**

உடலிலிருந்து உயிர் போன பின்னர், படுக்க வைத்து எரியூட்டுகிறார்கள்; அது சிதாக்நி. சிந்தா என்றால் கவலை. இந்த சிதா, சிந்தா இவை இரண்டில் எது பெரியது எனில், சிந்தாதான் பெரியது.

ஏனெனில், சிதாவானது உயிரற்ற உடலைத்தான் எரிக்கிறது. ஆனால் சிந்தாவோ, உயிருடன் இருக்கும் உடலையே எரித்துவிடுகிறது.

வயிற்றில் இருக்கும் ஜடராக்நி, சிந்தாக்நி, ஆசை என்னும் காமாக்நி, சோகாக்நி, க்ரோதாக்நி என்னும் எத்தனையோ நெருப்புகள், இந்த உடலை எரித்துக் கொண்டிருக்கின்றன.

ஆகையினால், காசி க்ஷேத்ரம் மட்டும் மஹாஸ்மசானம் அல்ல, இந்த உடலும் மஹா ஸ்மசானமாகும்.

**பக்தி: ஶ்ரத்தா இயம் கயா ।**

சாஸ்த்ரம், குரு இவர்களின் வார்த்தைகள் பொய்யில்லை, சாஸ்த்ரம் நமக்குத் தவறான வழியைச் சொல்லாது என்கிற எண்ணமே ச்ரத்தா

எனப்படும். ச்ரத்தையினால்தான் பக்தி வருகிறது. ச்ரத்தையையும் பக்தியையும் பிரிக்க முடியாது.

ச்ரத்தை என்பது உள்ளத்தில் இருப்பது, பக்தி என்பது அதன் வெளிப்பாடு. நமஸ்காரங்கள் செய்வதன் மூலமும், பூஜைகளின் மூலம் நாம் பக்தியை வெளிப்படுத்துகிறோம்.

ச்ரத்தையை ப்ரகடநம் செய்வதுதான் பக்தி. பக்தி, ச்ரத்தாதான் கயா என்று சொல்கிறார். இங்கு ச்ரத்தா என்று சொல்லப்படும் கயாவிற்குச் சென்றுதான் நாம் முன்னோர்களுக்கு ச்ராத்தம் செய்கிறோம்.

**ஶ்ரத்தயா இதம் கர்ம க்ரியதே இதி ஶ்ராத்தம் ।**

பூஜையைக் கூட ச்ராத்தம் என்று சொல்லலாம். ச்ரத்தையுடன் செய்யப்படும் கார்யம் ச்ராத்தம்.

**யதி மதீயே தேஹே ஸர்வம் வஸதி புந: அந்யத்**
**தீர்த்தம் கிம் அஸ்தி - (கிமபி நாஸ்தி) ।**

எல்லா தீர்த்தங்களும் எனக்குள்ளே இருக்கும்பொழுது, நான் எந்த தீர்த்தத்தையும் வெளியில் தேட வேண்டிய அவசியமில்லை.

இதன் பொருள், காசிக்குப் போவதால் ப்ரயோஜனம் இல்லை என்பதல்ல. இதனைத் தவறாகப் புரிந்து கொள்ளக்கூடாது.

வெளியில் இருக்கும் கலாசாரத்தை, பாரம்பர்யத்தை நாம் காப்பாற்றியே ஆக வேண்டும். வெளியில் ஸ்தூலமாகத் தெரியும்

விஷயங்களைக்கொண்டுதான் ஸூக்ஷ்மமான விஷயங்களைப் புரிந்துகொள்ள முடியும்.

இந்த ஸ்தூல சரீரத்திற்கு உணவிட்டு இதனை மதித்துக்கொண்டிருக்கும் வரையில், வெளியில் இருக்கும் விஷயங்களையும் நாம் பாராட்டித்தான் ஆக வேண்டும்.

காசிக்குச் செல்வோரை, இராமேச்வரத்திற்குச் செல்வோரை நன்கு உற்சாகப்படுத்த வேண்டும். ஆனால் இந்த காசி யாத்திரையுடன் நின்று விடக்கூடாது.

ஹ்ருதயத்தில் இருக்கும் காசிக்கும் போக வேண்டும். வெளியில் இருக்கும் காசிக்குப் போகும் பொழுதே நாம் உள்ளிருக்கும் காசியை உணரும் பொருட்டே செல்கிறோம் என்பது தெரிய வேண்டும்.

அந்த காசி க்ஷேத்ரத்திற்குச் சென்று வந்தால், உள்ளத்திலிருக்கும் காசியைப் புரிந்துகொள்ளும் சக்தி கூடும். விவேகம் பலமாகும். அது மட்டுமன்றி, இனி வரும் ஸந்ததியினருக்கு நாம் இந்த கலாசாரத்தைக் காண்பித்தாக வேண்டும்.

நாம் உள்ளத்திலிருக்கும் காசியைக் காண்பவராக இருந்தாலும், ஆரம்ப நிலையில் இருக்கும் ஆன்மிக ஸாதகர்களும் இதனைப் புரிந்து கொள்ளும்பொருட்டு, நாம் நமக்கு வெளியில் இருக்கும் காசியைப் போற்றித் தான் ஆக வேண்டும்.

காஶீ பஞ்சகத்தைப் படித்த பின்னர், புறத்தில் செய்யும் வழிபாடுகளெல்லாம் பயனற்றவை என்று எண்ணுவதோ, அதனைப் பரப்புவதோ தவறு.

அவ்வாறு செய்வது என்பது, நம்மைப் பெற்ற தாய் தந்தையரை வெறும் மனித உடல் என்று நாம் எண்ணினால் அது எவ்வளவு தவறோ, கோவிலில் இருப்பது வெறும் கல்லே என்று சொன்னால் அது எவ்வளவு தவறோ, அவ்வளவு தவறாகும்.

தாய் தந்தையரிடம், கோவிலில் இருக்கும் பகவானிடம் நாம் தெய்வீக பாவனையைக் கொள்ள வேண்டும்.

அவ்வாறே காசி, நம்முடைய மிகப் புனிதமான ஸ்தலம். அந்த பாவனையை நாம் ஒரு நாளும் விட்டுவிடக்கூடாது.

ஆக, இந்த பாவனையும், சடங்குகளும் அகத்தில் மேற்கொள்ளும் காசி யாத்திரைக்கு நம்மை தயார்ப்படுத்தும்.

உடலில் சக்தி இருக்கும்பொழுதே நன்கு யாத்திரைகள் செய்து, மனதைப் பக்குவப்படுத்தி விட வேண்டும். வயதான பின்னர், இந்த உள்ளிருக்கும் காசி யாத்திரையைத்தான் செய்ய வேண்டும்.

**யத்நேந த்ராயதே இதி யாத்ரா।**

முயற்சி செய்து நம்மை காப்பாற்றிக் கொள்வதற்கு யாத்ரா என்று பெயர். தீர்த்த யாத்ரா என்றால் ஜீவாத்மா தன்னைத் தூய்மைப்படுத்திக் கொள்ளும்பொருட்டு முயற்சி செய்து, சாஸ்த்ரங்களில் சொல்லப்பட்டுள்ள வ்ரதங்களைக் கடைப்பிடித்து, சாஸ்த்ரோக்தமாக தன்னை வருத்திக்கொண்டு செய்கின்ற யாத்திரையாகும்.

இங்கு சொல்லப்பட்டுள்ள அந்தர்முகமான (அகமுகமான) காசி யாத்திரை, நம்முடைய யதார்த்த ஸ்வரூபத்தைத் தெரிந்துகொள்ளும்பொருட்டு நாம் செய்யும் யாத்திரையாகும்.

என்னைப் பற்றிய உண்மையை அறிந்து கொள்வதற்கான ஸாதனைகளே எனக்குள் நிகழும் பயணம்.

ஆதிசங்கரர் காசி க்ஷேத்ரத்தில், மணிகர்ணிகா கட்டத்தில் இருந்துகொண்டே இந்த அற்புதமான காசி பஞ்சகத்தை நமக்கு அருளிச் செய்திருக்கிறார்.

இந்த காசி பஞ்சகத்தின் ச்லோகங்களை தினமும் பாராயணம் செய்து, இதன் அர்த்தத்தில் ஊறிக்கொண்டே இருந்தால், எத்தனை தர்ம வ்யவகாரங்கள் செய்துகொண்டே இருப்பினும், விடாமல் கங்கா ஸ்நானம் செய்துகொண்டே இருக்கலாம். இது மோக்ஷ தீர்த்தம்.

ஶ்ருதி ஸ்ம்ருதி புராணங்களின் இருப்பிடமாக இருக்கின்ற ஆசார்யர் ஆதிசங்கரர் மிகக் கருணையுடன் நமக்கு இந்த காசி பஞ்சகத்தை அருளி இருக்கிறார்.

வாழ்நாள் முழுவதும் நாம் இந்த ச்லோகங்களை அநுஸந்தாநம் செய்து, இந்த ஜன்மாவைப் பயனுள்ளதாக ஆக்கிக்கொள்ள குருவருளும் திருவருளும் துணை புரியட்டும்.

**ஓம் தத் ஸத்**





மேலான மனஅமைதியே
மணிகர்ணிகா கட்டம்.
இரண்டற்ற மெய்ப்பொருளைப்
பற்றிய பிளவுபடாத எண்ண
ஓட்டமே கங்கை நீரோட்டம்.
தூய உணர்வாகிய
நானே காசி க்ஷேத்ரம்.

